සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## தமிழ் மொழியும் இலக்கியமும் - දෙමළ භාෂාව හා සාහිත්‍ය

தரம் : **7** நேரம்: 2 மணித்தியாலம்

| பெயர் /சுட்டெண்: |
|---|

**பகுதி** I

- ♦ எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- ♦ மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

1) சிநேகிதி,பாங்கி, சகி எனும் பொருளைக் குறித்து வரும் வேறு ஒரு சொல்,
   1) புதல்வி  2) தோழி  3) மங்கை  4) பெண்

2) அறம் செய்ய விரும்பு இதில் அறம் என்பதன் ஒத்தக்கருத்துடைய சொல்,
   1) நட்பு  2) வரம்  3) மறம்  4) தர்மம்

3) அவன் தூரத்தில் ஓர் உருவத்தைக் கண்டான். இதில் உருவம் என்பதன் எதிர்க்கருத்து,
   1) தோற்றம்  2) உலகம்  3) அருவம்  4) பருவம்

4) கைவருதல் என்ற மரபுத் தொடரின் கருத்து,
   1) தேர்ச்சி பெறுதல்  2) வஞ்சித்தல்
   3) நிலை பெறுதல்  4) முற்றக்கற்றறிதல்

5) அழகு, தெய்வப் பெண், அச்சம் எனும் பல பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல்,
   1) அக்கிரம்  2) அத்தி  3) வரம்பு  4) அணங்கு

6) நேரே நிந்தித்தல் எனும் கருத்தைத் தரும் மரபுத்தொடர்,
   1) காலூன்றுதல்  2) கண்திறத்தல்
   3) நாக்கு நீளுதல்  4) முகத்திலடித்தல்

7) ‘உள்ளக் கமலம் அடி உத்தமனார் வேண்டுவது” இதில் ‘கமலம்” எனப்படுவது,
   1) மணம்  2) மனம்  3) தாமரை  4) மல்லிகை

8) எடுப்பார் கைப்பிள்ளைப் போல எனும் உவமைத்தொடரின் கருத்து,
   1) சுயநிலையற்ற தன்மை  2) ஒற்றுமை
   3) தலைமைச் சிறப்பு  4) ஏமாற்றம்

9) குமார் தன் தம்பியை புரட்டிப் புரட்டி அடித்தான். இங்கு புரட்டிப்புரட்டி என்பது,
   1) இரட்டைக்கிளவி  2) இணைமொழி
   3) அடுக்குத்தொடர்  4) அடுக்கிடுக்குத்தொடர்

10) பின்வருவற்றுள் அ∴றிணைப் பெயர்ச்சொல் அல்லாதது,
   1) தேவர்  2) நீர்  3) ஆடு  4) வேர்

11) தம்பி பந்தை உருட்டினான், இவ்வாக்கியத்தில் செயப்படு பொருள்,
   1) தம்பி  2) பந்தை  3) உருட்டினான்  4) செயப்படு பொருள்இல்லை

12) ஆற்று நீர் சல சல என ஓடும் ஓசை இனிமையாகக் கேட்டது. இங்கு காணப்படும் சல சல என்பது,

1) அடுக்குத்தொடர் 2) இரட்டைக்கிளவி
3) இணைமொழி 4) அடுக்கிடுக்குத்தொடர்

13) பின்வருவனவற்றுள் முன்னிலைப் பன்மை வாக்கியம்,

1) நீ பாடம் படி 2) நாம் வருகின்றோம்
3) அவர்கள் வந்தனர் 4) நீங்கள் வாருங்கள்

14) மாணவர்கள் சென்றனர். இவ்வாக்கியம்,

1) உயர்திணை ஆண்பால் 2) அ∴றிணை ஒன்றன்பால் .
3) உயர்திணை பலர்பால் 4) அ∴றிணைப் பலவின்பால்

15) ஈசன் உவக்கும் இன்மலர் எனும் பாடலைப் பாடிய புலவர்,

1) ஔவையார் 2) சோமசுந்தரப்புலவர்
3) பாரதியார் 4) விபுலானந்தர்

16) புலவர் உறங்குவதைக்கண்டு அரசன் சாமரையை எடுத்து வீசினார். சாமரை எனப்படுவது,

1) வாள் 2) விசிறி 3) முரசு 4) செல்வம்

17) களிறுக்குப் பிடி என்பது போல சேவலுக்கு,

1) கலை 2) சாகு 3) பேடு 4) பிணை

18) க்,ச்,ட்,த்,ப்,ற் எனும் ஆறு மெய்யெழுத்துக்களும்,

1) ஆய்தம் 2) இடையினம் 3) மெல்லினம் 4) வல்லினம்

19) கிளி இனிய பழங்களை உண்டது. இவ்வாக்கியத்தில் காணப்படும் அடைமொழி,

1) கிளி 2) இனிய 3) பழங்களை 4) உண்டது

20) அவர்கள் கிரியில் ஏறும்போது கவனமாகச் சென்றனர். இங்கு கிரி எனப்படுவது,

1) விமானம் 2) ஏணி 3) பாதை 4) மலை

**பகுதி II**

♦ **முதலாம், இரண்டாம், மூன்றாம் வினாக்கள் உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களில் கட்டுரை வரைக.
   1) உடைந்த பேனையின் சுயசரிதை
   2) ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பதை உணர்த்தும் ஒரு கதை
   3) மரம் வளர்ப்பதன் பயன்பாடு
   4) கல்வியின் சிறப்பு

2. பற்பசை அல்லது சவர்க்காரம் ஒன்றுக்கான விளம்பரம் ஒன்றை 50 சொற்களில் அமையுமாறு எழுதுக.

3. பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| சொல் | திணை | பால் | எண் | இடம் | காலம் |
|---|---|---|---|---|---|
| படித்தான் | ................. | ................. | ............... | ................. | ................. |
| ஓடுகிறது | அ∴றிணை | ஒன்றன்பால் | ஒருமை | படர்க்கை | நிகழ்காலம் |
| வருவேன் | ................. | ................. | ............... | ................. | ................. |
| பாடுகிறார்கள் | ................. | ................. | ............... | ................. | ................. |
| பறந்தன | ................. | ................. | ............... | ................. | ................. |

4. பாடநூலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
   1) பெருஞ்சேரல் இரும்பொறை என்ற மன்னனைக் காணவந்த புலவர் யார்?
   2) பென்சில் செய்ய தொழிற்சாலைக்கு கொண்டுவரப்பட்ட பொருட்கள் எவை?
   3) யாழ் நூலை இயற்றிய புலவர் யார்?
   4) கடலும் கிணறும் எனும் கதையை எழுதியவர் யார்?
   5) பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும் பூ எது?

5. பின்வரும் சொற்களை வைத்துப் பொருள் விளங்க வாக்கியம் அமைக்குக.
   1) உயிரும்உடலும் போல
   2) கீரியும் பாம்பும் போல
   3) கட கட
   4) மட மட
   5) அருமை பெருமை

6. பின்வரும் பாடலை வாசித்து, அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

*பழங்கள் என்று சொன்னதும்*
*பாலர் உள்ள் சிரிக்கிறார்*
*பழங்கள் பருகி நிற்பவர்*
*பாவம் முகத்தை சுழிக்கிறார்*

*தாவரம் என்று நீ சாமியைத்*
*தலை வணங்கிக் கேட்கிறாய்*
*தாவரம் இந்த உலகினைத்*
*தழைக்க வைத்துத் தழைக்குது*

1) பழங்கள் எனும் போது யார் முகத்தைச் சுழிக்கின்றனர்?
2) தாவரத்தின் மூலம் என்ன பயன் கிடைக்கிறது?
3) குழந்தையின் உள்ளம் எப்போது சிரிக்கிறது?
4) சாமியிடம் என்ன கேட்கப்படுகிறது?
5) பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்துடைய சொற்களை எழுதுக.
   a) பழங்கள்-
   b) பாலர் -
   c) சரி-
   d) தலை-

7. பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்துக்களை எழுதுக.
   1) தோள் கொடுத்தல்
   2) காதைக் கடித்தல்
   3) கண்டு காணுதல்
   4) கண் சாத்துதல்
   5) செவி மடுத்தல்

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.